# ஆளுநரே வெளியேறுக!



**சைதை சாதிக்**
தலைமைக் கழக பேச்சாளர்

தமிழக அரசின் கொள்கைக் கோட்பாடு, சித்தாந்தங்கள் ஒவ்வொன்றிலும் முரண்பட்டுப் பொது வெளியில் ஓர் அரசியல்வாதியைப் போன்று கருத்து தெரிவித்து வருகிறார். அரசியல் கட்சிகள் செய்ய வேண்டிய வேலையை ஆளுநர் ரவி தன்தலைமேல் போட்டுக் கொண்டு செயல்படுகிறார். தி.மு.கழகத்தின் கிளைக் கழகச் செயலாளர் ஆகின்ற தகுதி கூட இல்லாத இவர், ஒன்றிய ஆட்சியாளர்களின் ஊதுகுழலாகவே செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்.

குறிப்பாக தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப் மேற்குவங்கம் போன்ற எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் மோடி அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் அம்மாநில மக்களுக்கு எதிராக செயல்படுவதையும், ஆளும் மாநில கட்சிகளுக்கு நெருக்கடி கொடுப்பதையுமே முழுநேர வேலையாக செய்து வருகின்றனர். மாநில சட்டமன்றங்களில் நிறைவேற்றப்பட்ட சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் கிடப்பில் போட்டு வைத்து காலம் தாழ்த்தி வருகின்றனர். ஆளுநர் என்பதை தாண்டி, பா.ஜ.க. கட்சியின் உறுப்பினரைப் போல, அந்தந்த மாநில ஆளும் கட்சிகளுக்கு எதிரான கருத்துகளையும், சனாதனம் போன்ற இந்துத்துவ கருத்துகளையும் பிரச்சாரம் செய்வதையே தனது முழுநேரப் பணியாக கொண்டிருக்கின்றனர்.

ஆளுநர்கள் மாநில அரசுகளின் செயல்பாடுகளில் தலையிடுவது ஆளும் கட்சிகளுக்கு ஏற்படும் பிரச்சினையல்ல; பெயரளவிலான மாநில அரசுகளின் இறையாண்மையை பறிக்கும் பாசிச தாக்குதல். எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆர்.எஸ்.எஸ்பா.ஜ.க. கும்பல் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டாலும் தனது உளவாளிகளான ஆளுநர்கள் மூலம் அரசு அதிகாரத்தை தன் கைக்குள் வைத்து, இணையாட்சியை நடத்தி வருகிறது.

மேற்கூறிய அடிப்படையிலே, நாகாலாந்து மக்களால் விரட்டியடிக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ் உளவாளி ஆர்.என். ரவி, தமிழ்நாட்டின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

நியமிக்கப்பட்ட நாள் முதல் மாநில அரசு எதிராகவே செயல்பட துவங்கினர்,

தமிழ்நாட்டில் உள்ள ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளை அழைத்து மத்திய அரசு சொல்வதை மட்டுமே கேட்க வேண்டும் என்ற மிரட்டினார்.

தமிழக அமைச்சரவையால் முடிவு செய்யப்பட்ட தீர்மானங்களை திருப்பி அனுப்புவது,

ஆளுநர் மாளிகையில் பொங்கல் விழா நடைபெறும் என்று அறிவிக்கும் அழைப்பிதழில் தமிழ்நாடு என்ற பெயரையும்தமிழ்நாட்டின்லட்சினையையும்நீக்கினார்.

"நான் இருக்கும் வரை நடக்கவே நடக்காது, நீட் விலக்கு மசோதாவிற்க்கு ஒப்புதல் அளித்து கையெழுத்திட மாட்டேன்" திமிராக பேசினார்

தனக்கு அதிகாரம் இல்லாத போதும் அமைச்சர் செந்தில் பாலாஜியை அமைச்சரவையில் இருந்து தகுதி நீக்கம் செய்தது;

ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளால் ஆயிரக்கணக்கானோரின் உயிரும் பணமும் பறிக்கப்பட்டப்போதும் "ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவிற்கு" ஒப்புதல் அளிக்காமல் இருந்தது."

"பல்கலைக்கழக மசோதா" உள்ளிட்ட 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் காலம் கடத்தியது.

பொன்முடிக்கு அமைச்சர் பதவிப்பிரமாணம் செய்து வைக்க முடியாது என அறிவித்தது.

தமிழ்நாடு என்ற பெயரை தமிழகம் என்று மாற்றினால் பொருத்தமாக இருக்கும்' என்று கூறியது.

அய்யன் திருவள்ளுவர் படத்திற்கு காவி சாயம் பூசியது..

அ.தி.மு.க வின் முன்னாள் அமைச்சர்கள் செய்த ஊழல்களுக்கு எதிராக வழக்குகளை, அனுமதி தராமல் இழுத்தடிப்பது.

பேரறிவாளன் உள்பட ஆறு பேரில் விடுதலை குறித்து ஆளுநர் மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து, அதற்காக உச்ச நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு ஆளாகியது.

தன்னுடைய நடவடிக்கைகள் மூலம் ஆளுநராக நியமிக்கப்பட்டதிலிருந்தே தமிழ்நாட்டின் மக்களின் எதிர்ப்புக்கு தொடர்ச்சியாக ஆளாகிவருகிறார். "ஆர்.எஸ்.எஸ் உளவாளி", "மோடியின் அடியாள்" என்று விமர்சிக்கும் அளவுக்கு மக்கள் மத்தியில் அம்பலப்பட்டு போயுள்ளார்.

முதலமைச்சர் உள்ளிட்டவர்களைக் கொண்ட அமைச்சரவையின் அறிவுரையின் பேரிலேயே ஆளுநர் செயல்பட வேண்டும் என்கிறது அரசியலமைப்பு (Article 163 - There shall be a council of Ministers with the Chief Minister at the head to aid and advice the Governor in the exercise of his functions). எதற்கெடுத்தாலும் அரசியலமைப்பை மேற்கோள் காட்டும் ஆளுநர், இந்த

விதியைப் படித்தாரா என்பது நமது கேள்வி. மாநில அரசு அனுப்பிய மசோதாக்கள் விஷயத்தில், மக்கள் பிரதிநிதிகளின் ஒன்றுபட்ட குரலைப் புறந்தள்ளிய ஆளுநர் அரசியலமைப்பைப் பற்றி பேசுவதற்கு அருகதை அற்றவர்.

ஆளுநர் பதவியிலிருந்து ஆர்.என்.ரவியை வெளியேற்ற வேண்டும் என்ற கருத்து மக்களிடம் வலுப்பெறுவதற்கு தானே காரியகர்த்தாவாக இருந்து வருகிறார்.

இந்த நிலையில்தான், தமிழ்நாடு அரசால் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க, ஆளுநருக்கு கால வரம்பு நிர்ணயம் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தது, தமிழ்நாடு அரசு. அந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற அமர்வு, "தமிழ்நாடு ஆளுநர் இப்படி அரசியல் ரீதியாக சட்ட முட்டுக்கட்டையை ஏற்படுத்தியிருப்பது சட்டவிரோதம்" என்று தீர்ப்பளித்து இருக்கிறது"

மாநில உரிமைகளை பாதுகாக்கவும் ஆளுநருக்கு கடிவாளம் போட்டு உள்ளது உச்ச நீதிமன்றம் ஆளுநரின் அராஜக அடாவடித்தனங்களை மசோதா ஒப்புதல் தராமல் மக்கள் பணிகளை பாதிக்கச் செய்வதில் ஏற்பட்ட சிரமங்களை உச்ச நீதிமன்றத்தின் முறையிட்டு கழக வழக்கறிஞர் வைத்து அருமையான முறையில் வாதாடியதின் விளைவு உச்சநீதிமன்றம் ஆளுநரின் மாநில அரசின் 10 மசோதாக்கள் குறித்த அணுகு முறையினை சட்டப்படி யானதல்ல என்றதுடன் அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்துஆளுநர் எப்படி செயல்பட வேண்டும் வழிகாட்டு நெறிமுறையும் வெளியிட்டு ஆளுநர் என்பவர் சட்டமன்றத்திற்குக் கட்டுப்பட்டவர் என்பதையும் சுட்டிக் கட்டிக்காட்டி 10 மசோதாக்களுக்கு சட்டப்படியான ஒப்புதல் தந்து ஆளுநர்களுக்கு கடிவாளம் போட்டு உள்ளது..

கழக தலைவர், முதலமைச்சர் சொன்னார் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்று அவருடைய போராட்டத்தால் தமிழ்நாடு மட்டும் வெல்லவில்லை, இந்தியாவின் ஜனநாயக முறை வென்றுள்ளது கூட்டாட்சி தத்துவம் வென்றிருக்கிறது பா.ஜ.க. அல்லாத மாநில அரசுகளுக்கு நிம்மதி கிடைத்திருக்கிறது இன்று இந்தியாவுக்கு வழிகாட்டுகிற முதல்வராக நம்முடைய திராவிட மாடல் முதல்வர் விளங்குகிறார்,

இனியும் தமிழ்நாட்டில் இருப்பதற்கு ஆர்.என்.ரவிக்கு அருகதை இல்லை. உடனே அவர் தனது பதவியை ராஜினாமா செய்து தமிழ்நாட்டில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்..

தமிழக மண்ணில் பா.ஜ.க.வின் நரித்தனங்கள் எடுபடாது. பா.ஜ.க. அல்லாத அரசுகளுக்கு எல்லா உரிமையும் உண்டு. ஏதோ ஒற்றர்களை வைத்திருப்பது போல, கவர்னர்களை வைத்திருப்பது ஆட்சேபிக்கத்தக்கதாகும். தாம் மட்டுமே தேச பக்தர்கள் என்றும், அரசியல் சட்டத்தைக் காப்பது நமக்கு மட்டுமே உள்ள கடன் என்றும் கவர்னர்கள் கருதக்கூடாது" என்று 1969லேயே நாடாளுமன்றத்தில் முழங்கிய கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்*. இந்தியாவின் பன்முகத் தன்மைக்கு எதிராக ஆளுநர் பேசி வருவதைத் தமிழ்நாடும், தி.மு.க.வும் ஒருநாளும் ஏற்காது.



வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மறைந்த காங்கிரஸ் மூத்த தலைவர், தமிழ்ப் பற்றாளர் ஐயா குமரி அனந்தன் அவர்களது உடலுக்கு அஞ்சலி செலுத்தி, தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்ட அவரது குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

### சட்டமன்ற - நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் - 'இலக்கியச் செல்வர்'

# குமரி அனந்தன் மறைவு: தமிழ்நாடு சட்டப்பேரவை இரங்கல்!

## பேரவைத் தலைவர் புகழாரம் சூட்டினார்!

சென்னை, ஏப்.11-

சட்டப்பேரவை நேற்று முன்தினம் காலை கூடியதும், திருக்குற ளும் அதன் விளக்கமும் படிக்கப்பட்ட பின்னர், பேரவைத் தலைவர் அவர்கள், இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானத்தைப் படித்தார்.

பேரவைத் தலைவர் குறிப்பிட்டதாவது :-

'இலக்கியச் செல்வர்' என்று அழைக்கப்படும் குமரி அனந்தன் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்து பெருந்தலைவர் காமராசரின் அடியொற்றி, காங்கிரஸ் பேரியக்கத்துக்காக தன்னை ஒப்படைத்துக்கொண்டவர்.

அனைவரிடத்திலும் அன்போடும் நட்புணர்வோடும் பழகக்கூடிய குமரி அனந்தன் அவர்கள் 1980-1984, 1985-1988, 1989-1991 மற்றும் 1991-1996 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1977-1980 ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பாராட்டத்தக்க வகையில் சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

நாடாளுமன்றத்தில் தமிழில் பேசுவதற்கான உரிமையை நிலைநாட்டிய காரணத்தால், மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் "தனிமரம் தோப்பாகாது என்ற பழமொழியை மாற்றி அமைத்து விட்டார்" என இவருக்குப் புகழாரம் சூட்டினார்.

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பங்காற்றியதற்காக இவருக்கு தமிழ்நாடு அரசால் 2024 ஆம் ஆண்டு "தகைசால் தமிழர் விருது" இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள் உள்ளிட்ட அவருடைய குடும்பத்தினருக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப் பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு கூறினார்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

### திருநெல்வேலி கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி

# ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!




**மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமை! மாநில செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!**

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் நாளை (12.4.2025 - சனிக்கிழமை) அன்று மாலை 04.00 மணி அளவில் மேலப்பாளையம், மாவட்ட கழக அலுவலகம் (அம்பாசமுத்திரம் ரோடு, ரிலையன்ஸ் பல்க் அருகில்) நடைபெற உள்ளது.

இதில் பொறியாளர் அணிக்கு திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய/ நகர/ பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODEமூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.மேலும் சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் QR CODEமூலம் விண்ணப்பம் செய்தவர்கள் மட்டும் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடு செய்து தாங்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**எஸ்.கே.பி. கருணா**
செயலாளர், தி.மு.க. பொறியாளர் அணி

### ஒலக்கூர் கிழக்கு - திண்டிவனம் நகரக் கழகத்திற்கு உட்பட்ட

# பாகமுகவர்கள் - கிளைக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!

செஞ்சி, ஏப்.11-

ஒலக்கூர் மற்றும் திண்டிவனம் நகர கழகத்திற்கு உட்பட்ட பாகமுகவர்கள் (BLA2)மற்றும் கியளை கழக, வார்டு கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திண்டிவனத்தில் நடைபெறுவதாக விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது அறிக்கையில் அவர் கூறுகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஒலக்கூர்கிழக்கு, ஒன்றியம் மற்றும் திண்டி



வனம் நகரகழகத்திற்கு உட்பட்ட பாகமுகவர்கள் (BLA2) மற்றும் கிளை கழக நிர்வாகிகள்கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டம் இன்று (11.4.2025-வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு திண்டிவனம் மயிலம் சாலையில் உள்ள ஹரி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திண்டிவனம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஜாபர் அலி தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் திண்டிவனம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட,ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், பாகமுகவர்கள்,கிளைக் கழகச் செயலாளர்கள், வார்டு நிர்வாகிகள்,அனைத்து அணி பொறுப்பாளர்கள்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என தனது அறிக்கையில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.






விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி மரக்காணம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் வடநெற்குணத்தில்நடைபெற்ற கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மாஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றி 1500 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தலைமை கழக பேச்சாளர் ஆத்தூர் சபரி, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட பொருளாளர் ரமணன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார் ,ஒன்றிய சேர்மன் தயாளன், துணை சேர்மன் பழனி, மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்சிவானந்தம் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பங்கேற்றனர்

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ப.உ. சண்முகம்
### ஏப்ரல் 11 (2007)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அன்பும், நட்பும் கொண்டவர். திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும், கலைஞர் அவர்களின் அரசில் அமைச்சராகவும், கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.

"தி.மு.க. வரலாற்று ஏட்டில் திருவண்ணாமலை இடைத்தேர்தல் ஓர் மகத்தான திருப்புமுனை. அந்தத் தேர்தலில் திருவண்ணாமலையிலேயே தங்கி, தேர்தல் பணியாற்றுமாறு அண்ணா அவர்கள் எனக்கு கட்டளையிட்டிருந்தார். அந்த இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் ப.உ. சண்முகம் அவர்களுக்கு ஒரு தனிச் சிறப்பும், தனிப் பெருமையும் வாய்த்தது என்றே சொல்லலாம். இடையிடையே என்னுடன் ஊடல் கொண்டாராயினும் – இறுதிவரை கொள்கைக் குன்றமெனத் திகழ்ந்த காரணத்தால் என் இதயத்தில் இடம் பெற்ற நண்பர்களில் ஒருவராகவே திகழ்ந்தவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் நினைவு கூரப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், 1993ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், இவருக்கு அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**